**செய்தி வெளியீடு எண்:659** **நாள் : 31.12.2014**

**செய்தி வெளியீடு**

ஓமன் நாட்டிலுள்ள மருந்தக நிறுவனத்திற்கு ஆங்கிலப் புலமை, **D.Pharm** தகுதி மற்றும் மூன்று வருட அனுபவத்துடன் புரோமெட்ரிக் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் நடைபெறும் நேர்முகத் தேர்வில் தேர்ச்சிபெற்ற பிறகு புரோமெட்ரிக் தேர்வினை எழுத விருப்பமுள்ள 26 முதல் 32 வயதிற்குட்பட்ட ஆண் உதவி மருந்தாளுநர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கு தகுதி மற்றும் அனுபவத்திற்கேற்ப ஊதியத்துடன் ஓமன் நாட்டின் தொழிலாளர் சட்டதிட்டத்திற்குட்பட்ட சலுகைகளும் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட பணிக்கு விருப்பமும் தகுதியும் இருப்பின், தங்களின் சுய விவரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் அசல் கல்வி, அனுபவம், பாஸ்போர்ட் மற்றும் அதன் ஒரு நகல் மற்றும் நீல நிற பிண்ணணியில் எடுக்கப்பட்ட ஐந்து புகைப்படத்துடன் 6.1.2015 அன்று காலை 9.30 மணி முதல் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு எண்.42, ஆலந்தூர் சாலை, ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலகம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை–600 032 என்ற முகவரியிலுள்ள தமிழக அரசு நிறுவனமான அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு, 044–22502267/22505886 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவும் அல்லது www.omcmanpower.com என்ற இணையதளத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

**நிர்வாக இயக்குநர்**
**அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்**
**சென்னை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**